*மாணவர் கவனத்திற்கு:*

1) *இது வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள்.*
2) *ஒவ்வொரு வினாவுக்கும் விடையளிக்கத் தேவையான இடம் கொடுக்கப்பட்டுள்ளது, கொடுக்கப்பட்டுள்ள அளவின்படியே விடைகளை எழுதவும்.*
3) *இவ் வினாத்தாள் 'பொருத்துக' பிரிவையும் சேர்த்து மொத்தம் 63 வினாக்களைக் கொண்டுள்ளது.*
4) *விடைகளை பென்சிலால் எழுதக்கூடாது, பென்சிலால் எழுதப்பட்ட விடைகள் மதிப்பிடப் படமாட்டா.*

---

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **[15×1=15]**

1. ஆனந்தரங்கப் பிள்ளையைப் பாராட்டி சீனிவாசக் கவி இயற்றிய சமசுகிருத நூல்-

(அ) ஆனந்த ரங்கராட் சந்தமு (ஆ) ஆனந்த ரங்கக் கோவை

(இ) ஆனந்த ரங்க நாட்குறிப்பு (ஈ) ஆனந்த ரங்க விஜய சம்பு

விடை: **(ஈ) ஆனந்த ரங்க விஜய சம்பு** **1**

2. 'அனுஷ்டானம்' என்ற சொல்லுக்கு இணையான தமிழ்ச்சொல்-

(அ) ஒழுங்கு முறை (ஆ) தருமக்கொடை

(இ) அன்றாடக் கடமைகள் (ஈ) அருள் செய்தல்

விடை: **(இ) அன்றாடக் கடமைகள்** **1**

3. திருக்குறளை முதன்முதலில் ஆங்கிலத்தில் உலகநாடுகளுக்கு அறிமுகப் படுத்தியவர்-

(அ) டாக்டர் ஜி.யு. போப் (ஆ) எம். அரியல்

(இ) லியோ டால்ஸ்டாய் (ஈ) ஆல்பர்ட் சுவைட்டர்.

விடை: **(அ) டாக்டர் ஜி.யு. போப்** **1**

4. தொகலு கொம்பே ஆட்டத்தில் பொம்மைகள் என்ன தோலில் உருவாக்கப்படுகின்றன ?

(அ) புலி (ஆ) மாடு

(இ) மான் (ஈ) ஆடு

விடை: **(இ) மான்** 1

5. மக்களின் உயிர் மூச்சாக விளங்குவது -

(அ) காடு (ஆ) இயற்கை

(இ) காற்று (ஈ) நீர்

விடை: **(ஆ) இயற்கை** 1

6. டால்ஸ்டாயின் மனதை மயக்கிய மரச்சோலை -

(அ) தேக்கு (ஆ) பூவரசு

(இ) மா (ஈ) பூர்ச்சு

விடை: **(ஈ) பூர்ச்சமரச் சோலை** 1

7. மறுகக் கண்டது வான்சுழி -

(அ) ஆறு (ஆ) வெள்ளம்

(இ) நீரலை (ஈ) தண்ணீர்

விடை: **(ஆ) வெள்ளம்** 1

8. தமிழரசியின் செங்கோலாக விளங்குவது -

(அ) திருக்குறள் (ஆ) குண்டலகேசி

(இ) சிலப்பதிகாரம் (ஈ) மணிமேகலை

விடை: **(அ) திருக்குறள்** **1**

9. கவிஞர் வைரமுத்து அமெரிக்கத் தாய்க்கு என்ன புறா கொண்டு சென்றார் ?

(அ) ஜோடிப்புறா (ஆ) மணிப்புறா

(இ) மாடப்புறா (ஈ) சமாதானப்புறா.

விடை: **(ஈ) சமாதானப்புறா.** **1**

10. 'கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்' என்றவன் -

(அ) தருமன் (ஆ) அருச்சுனன்

(இ) வீமன் (ஈ) சகதேவன்

விடை: **(ஆ) அருச்சுனன்** **1**

11. பசவண்ணர் பிறந் த மாநிலம் -

(அ) ஆந்திரம் (ஆ) கருநாடகம்

(இ) தமிழ்நாடு (ஈ) கேரளம்

விடை: **(ஆ) கருநாடகம்** **1**

12. ‘அரசனாக வேண்டுமெனில்’ பாடலை இயற்றியவர் -

(அ) சுப்பிரமணிய பாரதியார் (ஆ) பாரதிதாசன்

(இ) தேசிக விநாயகம் பிள்ளை (ஈ) சுத்தானந்த பாரதியார்

விடை: **(இ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை** **1**

13. ‘வகுப்பு சிரித்தது’ இது என்ன ஆகுபெயர்?

(அ) இட (ஆ) கால

(இ) சினை (ஈ) பொருள்

விடை: **(அ) இட** **1**

14. நான்கு சீர்களால் அமைந்தது -

(அ) நெடிலடி (ஆ) சிந்தடி

(இ) குறளடி (ஈ) அளவடி

விடை: **(ஈ) அளவடி** **1**

15. ‘வருக வருக’ என்பது -

(அ) இரட்டைக்கிளவி (ஆ) ஏவல் வினைமுற்று

(இ) அடுக்குத் தொடர் (ஈ) சொல்லணி

விடை: **(இ) அடுக்குத் தொடர்** **1**

**II. கோடிட்ட இடங்களைத் தகுந்த விடைகளால் நிறைவு செய்க : [5×1=5]**

16. ஆபுத்திரனுக்கு அமுதசுரபியைக் கொடுத்து உதவிய தெய்வம் **தேவி சிந்தா விளக்கு**. 1

17. குழவி **பிணியின்றி** வாழ்தல் இனிது. 1

18. சின்னப்பிள்ளை தொடங்கிய தொண்டு நிறுவனம் **பில்லுக்களஞ்சியம்**. 1

19. பேராசிரியர் சுந்தரம் பிள்ளை இயற்றிய நூல் **மனோன் மணீயம்**. 1

20. பூங்குன்றனும் இளநாகனும் வழக்கைத் தீர்க்கும் படி ஊர்ப் பெரியவர் **நன்னன்** இல்லத்திற்குச் சென்றனர். 1

**III.** 21. **பொருத்துக : [5×1=5]**

| | | | |
|---|---|---|---|
| 1. சீவகனின் குலகுரு | ஃ பிளாரிடா | **சுந்தரமுனிவர்** | 1 |
| 2. மினிஇந்தியா | சிலேடை | **ஹீஸ்டன்** | 1 |
| 3. தருக்கள் | சேக்கிழார் | **பொதியலர்** | 1 |
| 4. இயேசு பிரான் வாழ்த்து | உவமைத் தொகை | **கண்ணதாசன்** | 1 |
| 5. இரு பொருள் | ஹீஸ்டன் | **சிலேடை** | 1 |
| | கண்ணதாசன் | | |
| | சுந்தரமுனிவர் | | |
| | பொதியலர் | | |

**IV. கீழ்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வாக்கியத்தில் விடைதருக.** **[10×1=10]**

22. ஆனந்தரங்கப் பிள்ளையின் நாட்குறிப்பு எத்தனை தொகுதி களாக அச்சிடப்பட்டுள்ளது ?

விடை: **12 தொகுதிகளாக** **1**

23. அடிப்படை இன்பத்தில் முதன்மையான இன்பம் எது ?

விடை: **உளவியல் இன்பம்** **1**

24. பூங்குன்றன் என்ன காரணத்திற்காக நிலத்தை விற்றார் ?

விடை: **மகளின் திருமணத்திற்காக** **1**

25. மனோன் மணிக்கு ஏற்ற மணவாளன் என்று சுந்தரமுனிவர் யாரைக் குறிப்பிடுகிறார் ?

விடை: **சேரமன்னன் புருடோத்தமன்** **1**

26. மனவளர்ச்சி இல்லாத மனிதர் வாழும் இடம் எதைப் போன்றது ?

விடை: **வெறும் மணல்மேடு** **1**

27. மழைக்கும்மிப் பாடலில் வரும் கடவுள் யார் ?

விடை: **முத்தாள்** **1**

28. முத்தநாதன் புத்தகக் கவளியில் என்ன கொண்டு வந்ததாகக் கூறினான் ?

விடை: **நாயனார் முன்னே அருளிய எங்கும் இல்லாத ஆகமநூல்.** **1**

29. இயேசு பிரான் யார்யாரை இரட்சிக்கிறார் ?

விடை: **ஏழைகளையும் பாவிகளையும்** **1**

30. புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதும் என்ன அணி ?

விடை: **வஞ்சப் புகழ்ச்சி அணி** **1**

31. மோனை என்றால் என்ன ?

விடை: **முதல் எழுத்து ஒன்றி வருவது.** **1**

**V. பின்வரும் கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் மூன்று வாக்கியங்களில் விடை எழுதுக. [15×2=30]**

32. ஆனந்தரங்கப் பிள்ளையின் மகள் திருமணத்திற்கு வந்த பிரெஞ்சுக்காரர்கள் எவ்வாறு வரவேற்கப் பட்டார்கள் ?

விடை: **கழுத்தில் பூமாலை; நெற்றியில் சந்தனம்; பாக்கு வெற்றிலை.** **2**

33. வீடு திரும்பிய அந்தணர் தம் மனைவியிடம் மகிழ்ச்சியுடன் கூறியது என்ன ?

விடை: **நல்லவர் முகத்தில் விழித்ததில்; போன இடங்களில் ஏதோ கிடைத்தது; தேவியின் திருவருள் இரண்டு நாளைக்கு ஆகாரத்துக்குக் கவலையில்லை.** **2**

34. சோலிகரின் ஆட்டப் பின்னணியில் உள்ள நம்பிக்கைகள் யாவை ?

விடை: **மழை பொழியும் ; பயிர் விளையும்; யானைகளால் தீங்கு நேராது.** **2**

35. சாந்தா பார்பரா தங்குவதற்குச் சிறந்த இடம் என்பதற்கு விடுதி மேலாளர் கூறிய காரணங்கள் யாவை ?

விடை: **பனியும், குளிரும் வெயிலும் அதிகம் இல்லை ; ஆண்டு முழுவதும் குளுகுளு வென்று இனிமை ; பரபரப்பு இல்லாத அமைதியான வாழ்க்கை.** **2**

36. நன்செய் நிலத்தின் இயற்கை வளத்தை மனோன்மணீயம் எவ்வாறு வருணிக்கிறது ?

விடை: **மருதவளம், நெய்தல் வளம் திணைமயக்க மாகக் கூறப்பட்டிருத்தல் ; பறவைகளின் பேரொலி, நாற்றுப் பறிப்பவர், நடுபவர்களின் பள்ளும் பாட்டும் சேர்ந்த ஒலி.** **2**

37. இளநாகன் புதையலை எதனால் மறுத்தார் ?

விடை: **விளைச்சலில் மட்டுமே உரிமை ; முன்னோர் புதைத்து வைத்த புதையலில் உரிமை இல்லை; நேர்மையாகாது.** **2**

38. நாடு எவ்வாறு இருக்கவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார் ?

விடை: **குறையற்ற விளைபொருள், சான்றோர், தாழ்விலாச் செல்வர்கள் இருத்தல் ; மிகுந்த பசி நீங்காத நோய், பகை இல்லாதிருத்தல்.** **2**

39. இறைவனை குணங்குடி மஸ்தான் எவ்வாறு வாழ்த்தி என்ன வேண்டுகிறார் ?

விடை: **தேடினாலும் கிடைக்காத செல்வமே! தேன்கடலே ! உனக்கு இணை ஏதும் இல்லை. ஏழை முகம் பார்; எளியவனைத் துன்பத்தில் ஆழ்ந்து விடாமல் காப்பாற்று.** **2**

40. முத்தநாதன் மெய்ப்பொருள் நாயனாரின் அரண்மனைக்கு எவ்வாறு சென்றான் ?

விடை: **உடல் முழுதும் திருநீறு; சடைமுடி ; கையில் புத்தகக்கவளி ; சிவனடியாராகப் பொய்த்தவ வேடம்.** **2**

41. சேரனின் யானை நிலவின் மேல் கைநீட்டியது என் ?

விடை: **போரில் பகை மன்னர்களின் வெண் கொற்றக் குடையை பறித்து எறிந்த பழக்கம், நிலவையும் வெண்குடை என நினைத்துக் கைநீட்டியது.** **2**

42. இளைஞனின் வலிமை கவிஞர் சிற்பியால் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகிறது ?

விடை: **புருவ நெரிப்பில் பூகம் பங்கள்; முழக்கம் உலகைச் செவிடு படச்செய்யும் எட்டி உதைத்தால் திசைகள் பொடிப் பொடி.** **2**

43. கடவுளின் செயல்கள் யாவை ? அவற்றை அவர் எவ்வாறு செய்கிறார் ?

விடை: **உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் படைத்தல், காத்தல் அழித்தல்; இடையறாது செய்தல்; விளையாட்டாகச் செய்தல்.** **2**

44. அணி என்றால் என்ன ? அணியின் வகைகள் யாவை ?

விடை: **செய்யுளைச் சொல்லாலும் செயலாலும் அழகு செய்வது; சொல்லணி, பொருளணி.** **2**

45. உடம்படுமெய் என்றால் என்ன ? அவை யாவை ?

விடை: **நிலைமொழி இறுதியிலும், வருமொழி முதலிலும் உயிரெழுத்துகள் வரும் போது, இணைப்பதற்காக வரும் மெய்யெழுத்து, ய், வ்.** **2**

46. உயிரளபெடை எத்தனை வகைப்படும் ? அவற்றின் பெயர் களைக் குறிப்பிடுக.

விடை: **மூன்று வகைப்படும் செய்யுளிசை அளபெடை, இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை.** **2**

**VI. பின்வரும் வினா ஒவ்வொன்றிற்கும் ஆறு வாக் கியங்களில் விடை எழுதுக.[5×3=15]**

47. கருநாடக நாட்டுப்புறக் கலைகளில் ஒன்றான யக்ஷகானத்தைப் பற்றி எழுதுக.

விடை: **முல்லை நிலத்தில் மூடலபாய; நெய்தலில் படுவலபாய, மேடை 250-300 சதுர அடி.** **3**

**பாகவதர் கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தல். ஆட்டக்காரர் இடமிருந்து தோன்றி வலமாக மறைதல் பாகவதர் பாட, நடிகர் உரையாடி நடித்தல் தோடங்கி அல்லது அனும, நாயகன் நகைச்சுவை.**

48. தமிழ் வித்துவான்களிடம் பாடம் கேட்க இயலாமைக்கு அந்தணர் கூறிய காரணங்கள் யாவை ?

விடை: **சூரியோதயம் முதல் அஸ்தமனம் வரை வயிற்றுப் பிழைப்புக்கே அலைய வேண்டியிருத்தல்; பாடஞ் சொல்லத் தக்கவர் யாருமில்லலை, இருந்தாலும் சுலபமாகச் சொல்லிக் கொடுப்பதில்லை, நாள் முழுவதும் பணிசெய்தாலும் ஏதோ கடனுக்காகச் சொல்லிக் கொடுப்பர்.** **3**

49. விசயன் வீமனுக்குச்சினம் தணியும்படி கூறியவை யாவை ?

விடை: **சினமான நெருப்பு அறிவை எரித்ததால் தருமன் மேல் கோபித்தாய், அறத்தின் வாழ்வைச் சூது கவ்வும்; ஆனால் அறமே வெல்லும். இவ் இயற்கை உண்மையை உலகிற்கு உணர்த்த விதி இதைச் செய்தான். மேலும் கருமங்கள் உண்டு கட்டுண்டோம்; பொறுத்திருப்போம் ; காலம் மாறும் அறம் வெல்லும் காண்டீவம் வில் உண்டு.** **3**

50. செய்யுள் விகாரம் என்றால் என்ன ? எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

விடை: **செய்யுளில் சொற்கள் இயல்பான நிலையிலிருந்து சிறிது வேறுபட்டு ஆளப்படுவது, ஆறுவகை வலித்தல், மெலித்தல், நீட்டல், குறுக்கல், விரித்தல், தொகுத்தல்.** **3**

51. 'கந்தையானாலும் கசக்கிக் கட்டு ; கூழானாலும் குளித்துக்குடி' – இப்பழமொழியை விளக்குக.

விடை: **வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய அடிப்படைத் தூய்மை, உடுக்கும் உடை கிழிந்திருந்தாலும் துவைத்துக் கட்டுதல், உண்பது எளிய உணவு என்றாலும் குளித்தபின் உண்ணல். உடல், உடைத் தூய்மை உளத்தூய்மைக்கும் வழிகோலும்.** **3**

**VII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **[5×3=15]**

52. ‘இவரைப் போன்ற பெண்மணிகளுக்கு அளிக்கப்படும் இந்த விருதால் விருதுகளுக்குத் தான் பெருமை.’

விடை: **சாதனை படைத்த பெண்கள்; - பாடம் பில்லுக்களஞ்சியம்- பில்லுச் சேரி சின்னப் பிள்ளைக்கு-தொழில் வாய்ப்புகள், ஏற்படுத்திக் கொடுத்த சிறந்த பெண்களுக்கான பஜாஜ் ஜானகிதேவி, விருது - மகாத்மா காந்தியடிகளின் பேத்தி சுமித்ரா குல்கர்ணி கூறியது.** **3**

53. ‘குழப்பமான நம் வழக்கை ஆராய்ந்து இந்தச் சிறுவனா தீர்ப்பு வழங்கப் போகிறான் ?’

விடை: **எ. சோதி எழுதிய புதையல் யாருக்கு ? - நாடகம், பூங்குன்றன் இளநாகனாரிடம் கூறுதல். சோழன் கரிகாலன் அவை. கரிகாலன் சிறுவனாய் இருப்பதைக் கண்டு கூறியது.** **3**

54. 'ஏடா ! அழியல் எழுந்திது கொள்ளாய் ! நாடு வறங்கூரினும் இவ் வோடு வறங் கூராது.'

விடை: **சாத்தனார் இயற்றிய மணிமேகலைக் காப்பியம். ஆபுத்திரனுக்கு தேவி சிந்தாவிளக்கு கூறியது. அம்பலத்தில் இரவவில் உணவு கேட்டு வந்த வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்க இயலாது வருந்திய வனுக்கு அமுத சுரபி கொடுத்துக் கூறியது.** 3

55. 'அவ்வழி நல்லை வாழிய நிலனே !'

விடை: **ஔவையார் பாடிய புறநானூறு. நிலம் நாடோ, காடோ, பள்ளமோ, மேடோ, எங்கே ஆண்மக்கள் நல்லவர்களோ அங்கே நிலமும் நன்றாய் இருக்கும்.** 3

56. 'தோழனாகி யாவர்க்கும் தொண்டனாக வேண்டுமடா!'

விடை: **கவிமணி தேசிக விநாயகம் இயற்றிய அரசனாக வேண்டு மெனில்** **3**

**பாடல் . தலைவனாக வேண்டும் என்றால் அனைவரிடமும்**

**நட்புடன் இருக்க வேண்டும் தலை வனே முதல் தொண்டனாக**

**VIII.பின்வரும் கேள்வி ஒவ்வொன்றிற்கும் எட்டு வாக்கியங்களில் விடைதருக.[2×4=8]**

57. ஆனந்தரங்கப் பிள்ளை தம் நாட்குறிப்பில் குற்றமும் தண்டனையும் பற்றி என்ன எழுதியுள்ளார் ?

**அல்லது**

ஏவுகணை விண்வெளிக்கு ஏவப்படும் முறையினை விளக்குக. **4**

விடை: **திருடனை அடித்துயார் யாருடைய வீடுகளில் திருட்டுப் பொருட்களை வைத்திருந்தான் என அறிதல், திருட்டைக் கண்டவன், கேட்டவன், தட்டுமுட்டு வாங்கி வைத்தவன், இடம் விட்டவன் எனப் பதினாறு பேரைக் கிடங்கில் போடல், நடுப்பட்டணத்தில், கடைத் தெருவில் முத்திரைச் சாவடிக்கு எதிரே தூக்கு மரம் நட்டு, சாயங்காலம் ஐந்து மணிக்கு கவர்னர் வந்து தூக்கிலிட ஆணையிடத் தூக்கிலிடல், இருவருக்கு ஆளுக்கு ஐம்பது கசையடி- காதுகளை அடியோடு அறுத்துத் துரத்தி விடல். மூவருக்கு ஆளுக்கு இருபத்தைந்து அடி அடித்து மீண்டும் கிடங்கில் போட்டல்.**

**அல்லது**

**தீயின் உதவியில் கோளத்துடன் மேலே எழும்பிப் பறக்கும், விண்வெளியை அடைந்தவுடன் கோளம் விடுபடும் கோளம் பிரிந்தவுடன் ஏவுகணைத் தீ அணைக்கப்பட வேண்டும். இதற்காக நைட்ரஜன் நீர்மம் வைக்கப்பட்டிருக்கும். 45 அடிச் சற்றளவு 40 அடி நீளம் உள்ள பாய்லர்களில் நீர்மம் அடைக்கப்பட்டு ஏவுகணையுடன் அனுப்பப்டும்.**

58. தீயவழியில் வரும் செல்வம் எவ்வாறு பயனின்றிப் போகும் ?

அல்லது

பூங்குன்றன், இளநாகன் இருவரும் நற்பண்புகள் நிறைந்த பெரியோர் என்பதை விவரிக்க. **4**

விடை: **கோடி கோடியாய் சேர்த்தாலும் தீண்டக் கூட முடியா மல் தவிப்பர். இனிப்பான ஒன்றை உண்ணவும் முடியாது. அமைதியாக உறங்க முடியாது. அவர்களுடைய வழித் தோன்றல்களே இழிந்த வழியில் செலவழித்து விட்டுச்சீரழிவர்.**

**அல்லது**

**பூங்குன்றன், நிலத்தை விற்றபிறகு அதில் எந்த உரிமையும் இல்லை ; அதனால் புதையலில் தனக்கு உரிமை இல்லை என்றல்; இளநாகன், நிலத்தின் விளைச்சலில் மட்டுமே உரிமை உண்டு. முன்னோர் விட்டுச் சென்ற புதையலில் இல்லை எனல். நிலத்தில் கிடைத்த பயனாகவே கொள்ள வேண்டும் எனப் பூங்குன்றனும், ஏற்றுக் கொண்டால் பிறர் பொருளைக் கவர்ந்த கள்வன் ஆவேன் என இளநாகனும் கூறல்.**

**IX.** 59. **பின்வரும் பாடலை வாசித்து அதன் திரண்ட பொருளை எழுதுக.** **[1×4=4]**

இலக்கியம் என்பதே இனிக்கும் கரும்பு

எடுத்துக் கடித்து அதை அருந்து !

இலக்கணம் என்பது விளக்கெண் ணெய்

இல்லை அது தேன் விருந்து !

தமிழ் மொழிப் படிப்பு உன் தாய்மொழிப் படிப்பு

தவறாது அது முதல் வேண்டும்.

தமிழினைச் சரிவரப் படித்துத் தேர்க !

தமிழனாய் இருக்க வேண்டும்.

விடை: **4**

**இலக்கியம் கரும்பு போன்று இனிமையானது. அதை விருப்பத்துடன் கற்றுக்கொள்.**

**இலக்கணம் வினக்கெண் ணெய் அல்ல; அதுவே தேன் விருந்து.**

**தமிழ் மொழிக் கல்வி உன்னுடைய தாய் மொழிக் கல்வியாகும். அதற்கு முதலிடம் கொடு.**

**பிழையின்றிக் கற்று, பண்பிலும் தமிழனாக இரு.**

60. **கேட்கப்பட்டுள்ள பாடல் வரிகளை அடி பிறழாமல் எழுதுக.** **[1×4=4]**
''காதொளிரும்........'' எனத் தொடங்கும் மொழிவாழ்த்து

அல்லது

'பொல்லாத சொல்லி........' எனத் தொடங்கும் பழமொழிப் பாடல்.

விடை: **4**

காதொளிரும் குண்டலமும் கைக்குவளை
யாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தா மணியும் மெல்லிடையில்
மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிர் பூந்தாளிணையும் பொன்முடிசூ
ளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாயத் திருக்குறளைத்
தாங்கு தமிழ் நீடு வாழ்க !

அல்லது

பொல்லாத சொல்லி மறைந் தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்ப்படுக்கும் - நல்லாய்
மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்
நுணலும் தன் வாயால் கெடும்.

61. பெண்ணுக்கு உரிமை வேண்டும் என்பதை பாரதிதாசன் எவ்வாறு வலியுறுத்துகிறார்?

**[1×4=4]**

அல்லது

திரு. வி.க. பாரதநாட்டின் சிறப்புகளை எவ்வாறு பட்டியலிடுகிறார்?

விடை: **4**

பெண் பேச்சுரிமை இன்றி மண்ணைப் போல் மதிக்கப் படுகிறாள். இந்நிலை மாறும் வரை நாட்டின் அடிமைத்தனமும் மாறாது. பெண்ணை ஊமையாக நடத்தும் வரை ஆண்களும் ஆமையைப் போல ஒடுங்கியே வாழநேரும். அறிவிலியாகப் பெண் இருந்தால் அவள் வயிற்றுக் குழந்தைகளும் அவ்வாறே இருப்பர்.

அல்லது

மலைகளிள் உயர்ந்த மலையாகிய இமயமலைப் பெற்றிக்கும் நாடு. பெரிய நதிகளுள் வான் நதி எனப்படும் கங்கை பெருகும் நாடு விளைபொருட்கள் எல்லாம் விளையும் நாடு, கைத்தொழிலும், வணிகமும் வளர்ந்தது. கலைகளும், வேதமும் அறிந்தது. கோவில் களும், சமய உண்மைகளும் நிறைந்தது. பாரத நாடு பழமையும் புகழும் கொண்ட நல்ல நாடு.

**X.** 62. பள்ளி மாற்றுச் சான்றிதழ் கேட்டு உன் தலைமை ஆசிரியருக்கு ஒரு விண்ணப்பம் வரைக. **[1×5=5]**

அல்லது

உன் பள்ளியில் நிகழ்ந்த ஆண்டு விழாக் கொண்டாட்டத்தைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

விடை:

**அனுப்புநர்** **5**
**பெறுநர்**
**மதிப்பிற்குரிய ஐயா / அம்மா,**

**கடிதப் பொருள்**

**மிக்க நன்றி,**

**நாள்:** **கீழ்ப்படிதலுள்ள மாணவன்**
**இடம்:** **.......................**

**அல்லது**

**நாள் :**
**முகவரி :**

**அன்புள்ள நண்பனுக்கு,**

**கடிதப் பொருள்**

**அன்புடன்,**
**.......................**

**நண்பனின் முகவரி**

63. **கீழ்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒரு தலைப்புப் பற்றி ஒரு பக்க அளவில் ஒரு கட்டுரை எழுதுக.** **[1×5=5]**

கல்விச் சுற்றுலாவும் மாணவர் பெறும் பயன்களும்

அல்லது

இன்றைய வாழ்வில் ஊடகங்களின் பங்கு

அல்லது

நான் விரும்பும் திருவிழா.

விடை:

**முன்னுரை** **5**

**உள்ளடக்கம்**

**-சிறு தலைப்புகள்**

**முடிவுரை**